திருவேற்காடு நகராட்சி,
சென்னை—77.
நாள்: 12.01.2023

# நகர்மன்ற அவசரக்கூட்டம்

அன்புடையீர்,

திருவேற்காடு நகராட்சி நகர்மன்ற அவசரக்கூட்டம் நகர்மன்ற தலைவர் திரு.E.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் வருகின்ற 13.01.2023 அன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படவுள்ளது. இக்கூட்டத்தில் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நகர்மன்ற தலைவர்,
திருவேற்காடு நகராட்சி.

பெறுநர்
திரு/திருமதி ...................................................................... அவர்கள்,

தலைவர்/துணைத் தலைவர்,

..................வது வார்டு உறுப்பினர்,

திருவேற்காடு நகர மன்றம்.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன பதிவு பதிவு எண்.TN 20 AJ 7480 வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு (Insurance) 28.12.2022—வுடன் முடிவு பெறுவதால், மேற்படி வாகனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு காப்பீடு புதுப்பித்தல் செய்திடவும், அதற்காக The New India Assurance Compaly Ltd., நிறுனத்தாரின் கேட்பின் படி காப்பீடு தொகை ரூ.11,864/— என பெறப்பட்டடுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு காப்பீடு தொகையினை பொது நிதியிலிருந்து காசோலையாக செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :—</u>

**1.**அனுமதி அளிக்கலாம்.

**2.** மேற்படி வாகனப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்—289** **நாள்:13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.2

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ள பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தெருமின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட மின்விளக்குகள் எரிவதற்கு தேவையான மின்இணைப்பு (Single Phase Line) பெற வேண்டி விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சமர்பித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும், மின்வாரியத்திலிருந்து தெரிவிக்கப்படும்

கேட்பு தொகையினை பொது நிதியின் கீழ் செலுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பகுதி | Phase விபரம் | மின்வாரிய அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | 5 | எட்டீஸ்வரன் கோயில் தெரு தெருமின் விளக்குகள் | Single Phase | அயனம்பாக்கம் |
| 2. | 5 | செட்டி தெரு தெருமின் விளக்குகள் | Single Phase | அயனம்பாக்கம் |
| 3. | 6 | பொன்னியம்மன் நகர் மின்மோட்டார்களுக்கு | Three Phase | பொன்னியம்மன் நகர் |

<u>அலுவலக குறிப்பு :-</u>

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மின் இணைப்பின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–290** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021–22–ன் கீழ் கீழ்க்கண்ட பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முக்கிய சாலை சந்திப்புகளில் புதியதாக 12 மீட்டர் உயரம் கொண்ட சிறிய வகை கோபுர விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட மின்விளக்குகள் எரிவதற்கு தேவையான மின்இணைப்பு (Single Phase Line) பெற வேண்டி விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சமர்பித்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும், மின்வாரியத்திலிருந்து தெரிவிக்கப்படும் கேட்பு தொகையினை பொது நிதியின் கீழ் செலுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பகுதி | மின்வாரிய அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | 4 | கோலடி சாலை சந்திப்பு | திருவேற்காடு |
| 2. | 14 | கிருஷ்ணா நகர் (சிவன் கோயில் சாலை) | திருவேற்காடு |
| 3. | 8 | சஞ்சய் காந்தி நகர் பகுதி | திருவேற்காடு |
| 4. | 6 | வானகரம் அம்பத்தூர் சாலை (மாந்தோப்பு சாலை சந்திப்பு) | அயனம்பாக்கம் |
| 5. | 7 | அயனம்பாக்கம் மில்லினியம் டவுன் பகுதி பூங்கா சந்திப்பு | அடையாளம் பட்டு |
| 6. | 8 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் தேவதாஸ் தெரு சந்திப்பில் | பொன்னியம்மன் நகர் |
| 7. | 8 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் பெருமாளகரம் சந்திப்பு | பொன்னியம்மன் நகர் |
| 8. | 15 | கோ–ஆப்ரேடிவ் நகர் அன்னம்மாள் சாலை சந்திப்பு | வேலப்பன்சாவடி |
| 9. | 16 | பள்ளிக்குப்பம் பெருமாள் கோயில் தெரு | வானகரம் |

<u>அலுவலக குறிப்பு :-</u>

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மின் இணைப்பின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–291 நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.4

இந்நகராட்சியின் 18 வார்டு பகுதிகளிலும், கீழ்க்கண்ட விவரப்படியான 7142 எண்ணிக்கையிலான தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | தெருமின் விளக்குகளின் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| | 1 x 40 W Tube Light | 1343 |
| | 4 X 36W CFL Lights | 1651 |
| | 2 x 36W CFL Lights | 58 |
| | 4 x 24W CFL Lights | 771 |
| | 2 x 24W CFL Lights | 648 |
| | 250W SV Lamp | 936 |
| | 150W SV Lamp | 403 |
| | 1 x 400W SV Lamp | 484 |
| | 2 x 400W SV Lamp | 266 |
| | 70W SV Lamp | 60 |
| | 60W LED Fittings | 60 |
| | 90W LED Fittings | 208 |
| | 48W LED Fittings | 250 |
| | 150 W LED Fittings | 4 |
| | **Total** | **7142** |

மேற்கண்ட தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்த நீட்டிப்புக்காலம் 31.12.2022–வுடன் முடிவடையவுள்ள நிலையில் பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் M/s.சன்வீயூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தார் 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான மூன்று மாத காலத்திற்கு தற்போதுள்ள நிபந்தனைகளின்படி அதே விலைவிகிதத்தில் பணியினை தொடர அனுமதி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** மேற்படி தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான அனுமதி கோரி ஏற்கனவே கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ள நிலையில் பொதுமக்களின் அடிப்படை வசதியான தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளின் அவசியம் கருதி தற்போது பணி தொடர்ந்து வரும் ஒப்பந்ததாரர் M/s.சன்வீயூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தார் மூலம் 01.01.2023 முதல் 31.03.2023 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பணி உத்திரவு நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.32.50 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி நீட்டிப்பு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும், மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–292 நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.5

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகன பதிவு எண்.TN 20 L 5952 என்ற வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு தொகை செலுத்திட M/s.The Indian Assurance Company Ltd., என்ற நிறுவனத்தின் மூலம் கேட்பு தொகை ரூ.21519/—ஐ செலுத்த கோரியதை தொடர்ந்து, இந்நகர்மன்ற தனது தீர்மான எண். நாள். .11.2022—ன்படி அனுமதி அளிக்கப்பட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி வாகனத்திற்கு M/s.The Indian Assurance Company Ltd., என்ற நிறுவனத்தின் மூலம் திருத்திய கேட்பு தொகை ரூ.30578/—ஐ செலுத்த இசைவு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, கீழ்க்கண்டவாறு ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகை ரூ.9059/—ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| திருத்திய காப்பீடு தொகை | – | ரூ. | 30578.00 |
| ஏற்கனவே காசோலை வழங்கப்பட்ட தொகை | – | ரூ. | 21519.00 |
| **மீதம் செலுத்தப்பட வேண்டிய தொகை** | – | ரூ. | **9059.00** |

<u>அலுவலக குறிப்பு :-</u>

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்கண்ட வாகன பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்—293** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.6

இந்நகராட்சி அலுவலகத்தின் மூலம் ஆயுதபூஜை, வடகிழக்கு பருவ மழையினால் தேங்கியுள்ள மழைநீரினை உள்ள பகுதிகள் மற்றும் கோ—ஆப்ரேடிவ் நகர் பகுதியில் உள்ள பூங்காவினை மாண்புமிகு.பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதற்கான புகைப்படங்கள் எடுத்த வகையில் M/s.MR Stills (Pro.M.R.Rameshkumar), Digital Studio, திருவேற்காடு, சென்னை—77 என்று நிறுவனத்தார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மேற்கண்ட பணிகளுக்கான கீழ்க்கண்டவாறு தொகை வழங்கிட கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | 05.10.22 அன்று திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆயுதபூஜை விழாவிற்கான புகைப்படம் | 6500.00 |
| 2. | 10.12.2022 அன்று நகராட்சி பகுதிகளில் தேங்கிய மழைநீர் உள்ள பகுதிகளை எடுக்கப்பட்ட புகைப்படம் | 4000.00 |
| 3. | 16.10.2022 அன்று கோ—ஆப்ரேடிவ் நகர் பூங்கா திறப்பு விழாவிற்காக புகைப்படம் | 8000.00 |
| | **மொத்தம்** | **18500.00** |

<u>அலுவலக குறிப்பு :-</u>

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்கண்ட பணிகளின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும், மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்—294** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சியில் தேசிய நகர்புற சுகாதார பணிக்கான நிதி 2022–2023 கீழ் காடுவெட்டி பகுதியில் நகர்ப்புற சுகாதார மைய கட்டிடம் அமைக்க நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில், மேற்படி பகுதிகளில் பணியினை மேற்கொள்ள ஏதுவாக அப்பகுதியை மண் பரிசோதனை (Soil Test) செய்ய வேண்டிள்ளதால், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி M/s.Chennai Soil Lab., No.2/49, Bajani Koil Street, Koyambedu, Chennai-107. என்ற நிறுவனத்தாரின் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.20000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அ) மேற்படி திட்டப்பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று M/s.Chennai Soil Lab., நிறுவனத்தார் அவர்களுக்கு பணிவுத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–295** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.8

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2022–23ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 10.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான 1HP மின் மோட்டார்கள், Starters மற்றும் மின் கேபிள்கள் சப்ளை செய்தல் | 9.50 | 1. M/s. ஜீவா எண்டர்பிரைசஸ்<br>2. M/s.V.மீனாள் @ கோ | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பணிடுதல். | 8.50 | 1. M/s.ஸ்ரீ செல்லியம்மன் @ கோ<br>2. M/s.V.மீனாள் @ கோ | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளை செப்பணிடுதல். | 8.50 | 1. M/s. ஜீவாஎண்டர்பிரைசஸ்<br>2. M/s.ஸ்ரீ செல்லியம்மன் @ கோ | 0.35 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.35 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான 5HP திறன் கொண்ட நீர் மூழ்கி மின்மோட்டார்கள், Starters மற்றும் மின் கேபிள்கள் சப்ளை செய்தல் | 6.00 | 1.திரு.G.விஜயகுமார்<br>2. M/s. MS எண்டர்பிரைசஸ் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | நகராட்சி சொந்தமான மழைநீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் மற்றும் டீசல் மோட்டார்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை அகற்றும் | 8.50 | 1.திரு.G.விஜயகுமார்<br>2. M/s. MS எண்டர்பிரைசஸ் | 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.75 % மதிப்பீட்டை விட அதிகம் |

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | பணி செய்தல். | | | |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி ஒவ்வொரு பணிகளில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்–296** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

சென்னைக்கு மிக அருகாமையில் அமைந்த திருவேற்காடு நகராட்சி 28.50 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 18 வார்டுகளாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி, மக்கள் தொகை 62,264 ஆகும். தற்போது சுமார் 25,000 குடியிருப்புகள் உள்ளன. தற்போது சுமார் 1,00,000 மக்கள் வசிக்கின்றனர். இந்நகராட்சியில் புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு தினசரி சென்னை மாநகரை ஒட்டியுள்ள பகுதிகளிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் பொது மக்கள் வருகின்றனர். தினசரி 22.50 மெட்ரிக் டன் குப்பைகள் நகராட்சி பகுதியில் சேகரம் ஆகிறது. இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட தூய்மைபணியாளர் பணியிடங்கள் மொத்தம் 24 ஆகும். தற்போது பணி ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக 13 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். பேரூராட்சியாக இருந்த திருவேற்காடு படிப்படியாக தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. புதிதாக தூய்மைபணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதற்கான வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை பணி விதிகளின் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசானை நிலை எண்.101 நாள்.30.04.1997 குறியீட்டின் படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின் பேரில் இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணிகள் **சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்** நிறுவனம் மூலம் தினசரி **192 பணியாளர்கள்** தருவிக்கப்பட்டு பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்த காலம் **31.12.2022**–ல் முடிவடைகிறது. இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் புதிய குறியீடு நிர்ணயிக்கும் பணி நடைபெற்று வருவதால் அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், நகராட்சி பகுதியில் தூய்மை பணிகளில் தேக்கநிலை ஏற்படாமல் இருக்கவும், பொது சுகாதார தூய்மை பணியின் அவசர அவசியத்தை கருதி துப்புரவு ஆய்வாளரின் 27.12.2022 தேதிய பரிந்துரையினை ஏற்று ஏற்கனவே 192 பணியாளர்களை வழங்கி வரும் **சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட்** நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து **01.01.2023 முதல் 31.03.2023 வரை** தூய்மை பணிகளை 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து முந்தைய ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அதே விலை விகிதப்படி ஊதியம் வழங்கிடவும் இதற்கான செலவினத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–297** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.10

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்டு மக்கும்

தன்மை கொண்ட குப்பைகள் முதல் நிலையிலேயே பசுமை உரக்குடிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இயற்கையான முறையில் 7(MCC) பசுமை உரக்குடிலில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளவும் **15 பணியாளர்களை** ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) தருவிக்கும் நிறுவனமான **சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்தின் பணிக்காலம் **31.12.2022** உடன் முடிவடைவதாலும், பணியின் அவசர அவசியத்தை கருதி துப்புரவு ஆய்வாளரின் **27.12.2022** தேதிய பரிந்துரையினை ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதாலும் திடக்கழிவு மேலாண்மை பணியில் தேக்கநிலை ஏற்படாமல் இருக்கவும் முந்தைய ஒப்பந்த நிறுவனமான சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பணிக்காலம் **01.01.2023 முதல் 31.03.2023 வரை 3** மாத காலத்திற்கு முந்தைய விலைவிகித அடிப்படையில் பணி நீட்டிப்பு செய்யவும், இதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–298** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.11

சென்னைக்கு மிக அருகாமையில் அமைந்த திருவேற்காடு நகராட்சி **28.50** சதுர கிலோமீட்டர் பரப்பளவில் **18** வார்டுகளாக உள்ளது. **2011** ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் படி, மக்கள் தொகை **62,264** ஆகும். தற்போது சுமார் **25,000** குடியிருப்புகள் உள்ளன. தற்போது சுமார் **1,00,000** மக்கள் வசிக்கின்றனர். இந்நகராட்சியில் புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு தினசரி சென்னை மாநகரை ஒட்டியுள்ள பகுதிகளிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் பொது மக்கள் வருகின்றனர். தினசரி **22.50** மெட்ரிக் டன் குப்பைகள் நகராட்சி பகுதியில் சேகரம் ஆகிறது. இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட தூய்மைபணியாளர் பணியிடங்கள் மொத்தம் **24** ஆகும். தற்போது பணி ஓய்வு மற்றும் இறப்பின் காரணமாக **13** பேர் மட்டுமே பணியில் உள்ளனர். பேரூராட்சியாக இருந்த திருவேற்காடு படிப்படியாக தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.புதிதாக தூய்மைபணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதற்கான வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை பணி விதிகளின் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசானை எண்.**101** நாள்.**30.04.1997** குறியீட்டின் படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின் பேரில் இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணிகள் **V.K Contractors** நிறுவனம் மூலம் தினசரி **50** பணியாளர்கள் தருவிக்கப்பட்டு பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்த காலம் **31.12.2022–**ல் முடிவடைகிறது. இந்நகராட்சி பகுதியில் தூய்மை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் புதிய குறியீடு நிர்ணயிக்கும் பணி நடைபெற்று வருவதால் அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், நகராட்சி பகுதியில் தூய்மை பணிகளில் தேக்கநிலை ஏற்படாமல் இருக்கவும், பொது சுகாதார தூய்மை பணியின் அவசர அவசியத்தை கருதி துப்புரவு ஆய்வாளரின் **27.12.2022** தேதிய பரிந்துரையினை ஏற்று ஏற்கனவே **50 பணியாளர்களை** வழங்கி வரும் **V.K Contractors** நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து **01.01.2023** முதல் **31.03.2023** வரை தூய்மை பணிகளை **3** மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து முந்தைய ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அதே விலை விகிதப்படி ஊதியம் வழங்கிடவும் இதற்கான செலவினத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–299** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.12

இந்நகராட்சி பகுதியில் டெங்கு நோய் மற்றும் கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்திடவும் , முன்களப்பணியாளர்களான DBC பணியாளர்கள் வீட்டுக்கு வீடு சென்று டெங்கு நோய் தடுப்பு களப்பணி மற்றும் காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு **30 DBC** பணியாளர்களை தருவித்துக்கொள்ள விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய ஒப்பந்த நிறுவனமான **வீரத்தாய் (NGO) மகளிர் குழு கூட்டமைப்பு** நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 31.12.2022 உடன் முடிவடைகிறது. தற்போது நகராட்சி பகுதியில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தடுப்பு களப்பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 27.12.2022 தேதிய குறிப்பில் 3 மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து தர பரிந்துரை செய்துள்ளார். ஆகவே **01.01.2023 முதல் 31.03.2023 வரை 3** மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கெனவே வழங்கிய ஊதிய விகிதத்தின் படியே ஊதியம் வழங்கிடவும் இதற்கான தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–300** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.13

இந்நகராட்சி பகுதியில் டெங்கு நோய் கட்டுப்படுத்திட முன்களப்பணியாளர்களான DBC பணியாளர்கள் வீட்டுக்கு வீடு சென்று டெங்கு நோய் தடுப்பு களப்பணி மற்றும் காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு **20 DBC** பணியாளர்களை தருவித்துக்கொள்ள விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய ஒப்பந்த நிறுவனமான **இராணி அண்ணா நகர் பகுதி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு** நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 31.12.2022 உடன் முடிவடைகிறது. தற்போது நகராட்சி பகுதியில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தடுப்பு களப்பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 27.12.2022 தேதிய குறிப்பில் 3 மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து தர பரிந்துரை செய்துள்ளார். ஆகவே 01.01.2023 முதல் 31.03.2023 வரை 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கெனவே வழங்கிய ஊதிய விகிதத்தின் படியே ஊதியம் வழங்கிடவும் இதற்கான தோராய செலவினம் பொது நிதியில் செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** மேற்கொள்ள மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–301** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.14

இந்நகராட்சி பகுதியில் டெங்கு நோய் கட்டுப்படுத்திடவும் , முன்களப்பணியாளர்களான DBC பணியாளர்கள் வீட்டுக்கு வீடு சென்று டெங்கு நோய் தடுப்பு களப்பணி மற்றும் காய்ச்சல் கணக்கெடுப்பு பணிக்கு **25 DBC** பணியாளர்களை தருவித்துக்கொள்ள விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய ஒப்பந்த நிறுவனமான **சிங்கப்பெண்கள் பகுதி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு** நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் **31.12.2022** உடன் முடிவடைகிறது. தற்போது நகராட்சி பகுதியில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தடுப்பு களப்பணி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களின் **27.12.2022** தேதிய குறிப்பில் மூன்று மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து தர பரிந்துரை செய்துள்ளார். ஆகவே **01.01.2023 முதல் 31.03.2023 வரை** 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கெனவே வழங்கிய ஊதிய விகிதத்தின் படியே ஊதியம் வழங்கிடவும் இதற்கான தோராய செலவினம் வருவாய் நிதியில் செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–302** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.15

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள முக்கிய சாலைகளான **திருவேற்காடு பேருந்து நிலையம் முதல் வேலப்பன்சாவடி வரை, பூந்தமல்லி நெடுஞ்சாலை இருபுறமும், வணிக நிறுவனங்கள் அடங்கிய பகுதியாகவும் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்லும் பாதையாகவும் உள்ளது.** எனவே, இந்த பிரதான சாலைகளில் மக்கும் மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள 15 பணியாளர்களை தருவிக்கும் **L.K. எண்டபிரைசஸ்** நிறுவனத்தின் ஒப்பந்த காலம் **31.12.2022** உடன் முடிவடைவதால், தூய்மை பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும், நகராட்சி பகுதியில் அதிகளவில் பரவி வருவதாலும் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை **01.01.2023 முதல் 31.03.2023 வரை** 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 27.12.2022 தேதிய பரிந்துரையினை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்கனவே **15 பணியாளர்களை** தருவித்து வரும் நிறுவனத்திற்கு அதே விலை விகிதப்படியே ஏற்கெனவே வழங்கப்பட்ட நிபந்தனைகளின் படி 15 பணியாளர்களை வழங்கிட பணி உத்திரவு வழங்கவும் மற்றும் இதற்காக ஆகும் தோராய செலவினம்**ரூ.9.90/–இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–303** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.16

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள முக்கிய சாலைகளான **ஆவடி பருத்திபட்டு பாலம் முதல் ஜெஹ பொறியியல் கல்லூரி வரை, பருத்திப்பட்டு முதல் நகராட்சி அலுவலகம் வரை, நகராட்சி அலுவலகம் முதல் கோலடி வரை வணிக மற்றும் முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி வந்து செல்லும் பாதை உள்ளது.** எனவே, இந்த பிரதான சாலைகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள 15 பணியாளர்களை தருவிக்கும் **L.K. எண்டபிரைசஸ்** நிறுவனத்தின் ஒப்பந்த

காலம் **31.12.2022** உடன் முடிவடைவதால், தூய்மை பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும், நகராட்சி பகுதியில் அதிகளவில் பரவி வருவதாலும் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை **01.01.2023 முதல் 31.03.2023 வரை** 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 27.12.2022 தேதிய பரிந்துரையினை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்கனவே **15 பணியாளர்களை** தருவித்து வரும் நிறுவனத்திற்கு அதே விலை விகிதப்படியே ஏற்கெனவே வழங்கப்பட்ட நிபந்தனைகளின் படி 15 பணியாளர்களை வழங்கிட பணி உத்திரவு வழங்கவும் மற்றும் இதற்காக ஆகும் தோராய செலவினம் **ரூ.9.90/–இலட்சத்திற்கு** வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–304** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.17

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்டு மக்கும் தன்மை கொண்ட குப்பைகள் முதல் நிலையிலேயே பசுமை உரக்குடிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இயற்கையான முறையில் 7(MCC) பசுமை உரக்குடிலில் உரம் தயாரிக்கவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை கண்காணிக்க **3 துப்புரவு ஆய்வாளர்களை** ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) தருவிக்கும் நிறுவனமான **சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்தின் பணிக்காலம் 31.12.2022 உடன் முடிவடைவதாலும், தற்போது நகராட்சி பகுதியில் பணியின் அவசர அவசியத்தை கருதி துப்புரவு ஆய்வாளரின் 27.12.2022 தேதிய பரிந்துரையினை ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதாலும் திடக்கழிவு மேலாண்மை பணியில் தேக்கநிலை ஏற்படாமல் இருக்கவும் முந்தைய ஒப்பந்த நிறுவனமான சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பணிக்காலம் **01.01.2023 முதல் 31.03.2023 வரை** 3 மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும், இதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–305** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று கண்காணித்து கொரோனா தொடர்பான விவரங்களை உரிய படிவங்களில் சேகரித்திடவும், கொரோனா தடுப்பு நடவடிக்கையாக உடல் வெப்பம் கண்டறிதல் உள்ளிட்ட பணிகள் **காமாட்சிபுரம் பகுதி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு** மூலம் **40 பணியாளர்கள்** வெளிக்கொணர்வு முறையில் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது கொரோனா வைரஸ் காய்ச்சல் குறைந்து உள்ளதால் கொரோனா நோய் தடுப்பு பணியாக காய்ச்சல் கணக்கெடுப்பு பணி எதுவும் நடத்தப்பட வேண்டியது இல்லை. மேலும் களப்பணியாளர்கள் மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியாக வீடுகளில் கொசுப்புழுக்களை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது. இதில் வாரத்திற்கு **6** நாட்களில் **300** வீடுகளுக்கு ஒரு நபர் கண்காணிப்பது என்ற நடைமுறையின் படி களப்பணியாளர்கள் **120**

நபர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது **80** நபர்கள் மட்டுமே டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்கிறார்கள். தற்போது காமாட்சிபுரம் பகுதி அளவிலான மகளிர் குழு மூலம் பணிபுரியும் **40** பணியாளர்களை டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக அமர்த்திக் கொள்ளவும் **01.01.2023 முதல் 31.03.2023 வரை 3** மாதத்திற்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்யவும் துப்புரவு ஆய்வாளரால் **27.12.2022** தேதிய குறிப்பின் பரிந்துரையினை ஏற்று முந்தைய விலை விகிதத்தின் படி ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு **40 பணியாளர்கள்** டெங்கு தடுப்பு பணிக்கு வழங்கிட பணி உத்திரவு வழங்கிடவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–306** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.19

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள முக்கிய மெயின் சாலைகளில் தூய்மையாக பராமரிக்க வானகரம் முதல் ACS மருத்துவமனை வரையிலும் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை இருபக்கங்களிலம் வேலப்பன்சாவடி பேருந்து நிறுத்தம் முதல் பெருமாளகரம் மெயின் சாலை திருவேற்காடு பேருந்து நிறுத்தம் வரை உள்ள சாலைகளின் இருபக்கங்களிலும் உள்ள குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்யும் பணிக்கு **ஸ்ரீ சாய் ராம் எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் மூலம் **5 டிராக்டர்கள்** சப்ளை செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் வரும் **31.12.2022** தேதியுடன் முடிவடைவதால் மேற்படி நிறுவனத்திற்கு மேலும் **1** மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய துப்புரவு ஆய்வாளரால் **27.12.2022** தேதிய குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டதை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரிட கால தாமதம் ஆகும் என்பதால் ஏற்கனவே **5** டிராக்டர்கள் சப்ளை செய்யும் **ஸ்ரீ சாய் ராம் எண்டர்பிரைசஸ்** நிறுவனத்திற்கு **01.01.2022 முதல் 31.03.2022 வரை 3** மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து முந்தைய ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு முந்தைய விலை விகிதத்தின் படி **5** டிராக்டர்கள் சப்ளை செய்ய பணி உத்திரவு வழங்கிடவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–307** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.20

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து முதல் நிலையிலேயே பசுமை உரக்குடில்களுக்கு எடுத்து செல்லப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்க குப்பைகள் தரம் பிரித்து பசுமை உரக்குடில்களுக்கு **2** TATA ACE மற்றும் **3** டிராக்டர் வாகனங்கள் மூலம் சேகரம் செய்யும் பணிக்கு **ஸ்ரீ சாய் ராம் எண்டர்பிரைசஸ்** நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் **31.12.2022** உடன் முடிவடைய உள்ளது. தற்போது TATA ACE வாகனங்களுக்கான தேவை குறைவாகவும், டிராக்டர்கள் தேவையாகவும் உள்ளதால் **5 டிராக்டர்களை** மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் தருவிக்க பணி நீட்டிப்பு செய்ய துப்புரவு ஆய்வாளரால் 27.12.2022 தேதிய குறிப்பின் பரிந்துரையினை ஏற்று ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து **ஸ்ரீ சாய் ராம் எண்டர்பிரைசஸ்** நிறுவனத்திற்கு **01.01.2022 முதல் 31.03.2022 வரை**

3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து முந்தைய விலை விகிதத்தின் படி ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு **5 டிராக்டர்கள்** சப்ளை செய்ய பணி உத்திரவு வழங்கிடவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் **ரூ.9.90/– இலட்சத்திற்கு** பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–308** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.21

நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு வெளிகொணர்வு முறையில் 192 பணியாளர்கள் தூய்மை பணி புரிவதற்கான நியமிக்கப்பட்டுள்ளனர். நகராட்சி பகுதியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனத்திற்கு **டாடா ஏஸ் வாகனங்கள்–10, டிப்பர் லாரி –3, பாப்கட்–1 கழிவுநீர் லாரி –2, மொத்தம்–16** வாகனங்கள் தினசரி பயன்படுத்தப்படுகின்றது. இந்த வாகனங்களை இயக்குவதற்கு ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் தூய்மை பணியாளர்கள் வாகனங்களை இயக்கி பயன்படுத்தப்படுகிறார்கள். இதனால் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு ஆட்கள் பற்றாக் குறை ஏற்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, **20 ஓட்டுனர்கள்** ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) தருவிக்கும் நிறுவனமான **சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்தின் பணிக்காலம் 31.12.2022 உடன் முடிவடைவதாலும், பணியின் அவசர அவசியத்தை கருதி துப்புரவு ஆய்வாளரின் 27.12.2022 தேதிய பரிந்துரையினை ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதாலும் திடக்கழிவு மேலாண்மை பணியில் தேக்கநிலை ஏற்படாமல் இருக்கவும் முந்தைய ஒப்பந்த நிறுவனமான சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பணிக்காலம் **01.01.2023 முதல் 31.03.2023 வரை** 3 மாத காலத்திற்கு முந்தைய விலைவிகித அடிப்படையில் பணி நீட்டிப்பு செய்யவும், இதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–309** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.22

நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு வெளிகொணர்வு முறையில் 192 பணியாளர்கள் தூய்மை பணி புரிவதற்கான நியமிக்கப்பட்டுள்ளனர். குடியிருப்புகள் அல்லாமல் பொது சாலைகள் நிறைந்த பகுதியாகவும் 28.05 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இவ்வாறு பரந்த பகுதியில் தூய்மை பணிகள் மேற்கொள்வதை கண்காணிக்க அரசாணை எண்.101–ன் படி 30 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் தேவைபடுகின்றார்கள். ஆனால், தற்பொழுது நிரந்தர துப்புரவு மேற்பார்வையாளர்கள் 1 நபர் தவிர 10 நபர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். எனவே, **10 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள்** ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) தருவிக்கும் நிறுவனமான **சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்தின் பணிக்காலம் 31.12.2022 உடன் முடிவடைவதாலும், பணியின் அவசர

அவசியத்தை கருதி துப்புரவு ஆய்வாளரின் 27.12.2022 தேதிய பரிந்துரையினை ஏற்று ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதாலும் திடக்கழிவு மேலாண்மை பணியில் தேக்கநிலை ஏற்படாமல் இருக்கவும் முந்தைய ஒப்பந்த நிறுவனமான சீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பணிக்காலம் **01.01.2023 முதல் 31.03.2023** வரை 3 மாத காலத்திற்கு முந்தைய விலைவிகித அடிப்படையில் பணி நீட்டிப்பு செய்யவும், இதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் பணி உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–310** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.23

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி 25 மெட்ரிக் டன் அளவிளான திடக்கழிவுகள் சேகரம் ஆகிறது. இவற்றுள் மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் சம அளவில் உள்ளன. மக்கும் கழிவுகள் MCC மையங்களுக்கு உரம் தயாரிக்க கொண்டு செல்லப்படுகிறது. மக்காத குப்பைகள் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டூர் அய்யனார் வேஸ்ட் மார்ட் நிறுவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அப்புறப்படுத்திட துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 28.11.2022 தேதிய குறிப்பில் பரிந்துரைக்கப்பட்டதை ஏற்று இத்திடக்கழிவுகளை கொண்டு சென்று அப்புறபடுத்திட பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள தோராய செலவீனம் **ரூ.9.90/–** இலட்சம் வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ள 29.11.2022–ல் நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெறப்பட்டு 04.12.2022 முதல் 18.12.2022 வரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.9.90 லட்சம் நிதி ஒதிக்கீடு முடிவடைவதால் தொடர்ந்து குப்பைகள் MCC மையத்திலிருந்து மறுசுழற்சிக்கு அனுப்பபட வேண்டியுள்ளதால் ஏற்கனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்த **GS Enterprises** நிறுவனத்தின் மூலம் 19.12.2022 முதல் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள தோராய செலவீனம் **ரூ.9.90/–** இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–311** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.24

இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளுக்கான பட்டியல் வழங்கப்பட்டு, அவற்றில் பிடித்தம் செய்யப்படும் ASD, PSD, EMD மற்றும் RMD தொகைகள் 2016–17 முதல் 2017–18 வரையிலான காலத்திற்கு கீழ்க்கண்டவாறு உள்ள ஒப்பந்தாரர்களின் காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரின் பெயர் | வருடம் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.பொன்னம்மாள் | 2016–17 மற்றும் 2017–18 | 157228.00 |
| | | **மொத்தம்** | **157228.00** |

மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள தொகை ரூ.1,57,228/–ஐ ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–312** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.25

திருவேற்காடு நகராட்சி பகுதியில் மொத்தம் 18 வார்டுகள் உள்ளது. தற்போதைய கணக்கெடுப்பின் படி 31,544 வீடுகள் மற்றும் 1800 வணிக நிறுவனங்கள், 1 இலட்சம் மக்கள் தொகை கொண்டது. மேலும், 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள பெரிய நகராட்சியாகும். சென்னைக்கு அருகில் உள்ள முக்கிய நகராட்சியாகும். அதிக அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது. தற்போதைய பணியாளர்கள் எண்ணிக்கை மற்றும் வாகனங்களும் துப்புரவு பணி மேற்கொள்வது சிரமமாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து **ROC.No.33553/2022/EA2-SWM-10 நாள்.10.01.2023** வரப்பெற்ற உத்திரவின்படி நமது நகராட்சியின் மொத்த தினசரி கழிவுகளின் அளவு 38.5 மெட்ரிக் டன் குப்பைகளை தினசரி கையாள்வதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.1.73 இலட்சம் என 1 வருடத்திற்கு ரூ.751.43 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்த புள்ளிகள் கோர துப்புரவு ஆய்வாளர் அவர்களால் 11.01.2023 தேதிய குறிப்பில் பரிந்துரைக்கப்பட்டதை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, இதற்கான ஓராண்டு தோராய செலவினம் **ரூ.751.43/– இலட்சத்திற்கு** பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–313** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.26

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் எண்.43, கோலடி கிராமம் சர்வே எண்.26/2, 1.46.00ஹெ மொத்த பரப்பில் 0.41.9 ஏர்ஸ் மேய்க்கால் வகைபாடு கொண்ட இடத்தில் T5 திருவேற்காடு காவல் நிலையம் மற்றும் உதவி ஆணையர் அலுவலகம் SRMC சரகம் அமைக்க தீர்மானம் நிறைவேற்றிட வேண்டி வட்டாட்சியர், பூவிருந்தவல்லி கடித எண்.2489/2022/ஆ2 நாள்:24.09.2022–ன் மூலம் தெரிவித்துள்ளதனை மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி வட்டம் எண்.43, கோலடி கிராமம் சர்வே எண்.26/2, 1.46.00ஹெ மொத்த பரப்பில் 0.41.9 ஏர்ஸ் மேய்க்கால் வகைபாடு கொண்ட இடத்தில் T5 திருவேற்காடு காவல் நிலையம் மற்றும் உதவி ஆணையர் அலுவலகம் SRMC சரகம் அமைத்திட நிலமாற்றம் செய்து வழங்கிட நகர்மன்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என தெரிவித்து கொள்ளலாம்.

**தீர்மானம் எண்–314** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.27

இந்நகராட்சி பகுதிகளில் தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையினால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதை நகராட்சி சொந்தமான மற்றும் வாடகை அடிப்படையிலான மோட்டார்கள் மூலம் மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட இடங்களை மாண்புமிகு.அமைச்சர் பெருமக்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டதையடுத்து பருவ மழை தொடர்ந்து அதிகரிக்கும் நிலை உள்ளதால் கூடுதலாக அதிதிறன் கொண்ட மோட்டார்களை பயன்படுத்த அறிவுறுத்தினர். தற்போது நிலையில் நகராட்சி சொந்தமான அனைத்து மோட்டார்களும் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் கூடுதல் மோட்டார்கள் இல்லாத காரணத்தினால் வெள்ள பாதிப்பு அதிகம் உள்ள ஏழுமலை நகர், பாலகிருஷ்ணா நகர் மற்றும் அரவிந்த நகர் ஆகிய பகுதிகளில் 40 HP அதிதிறன் கொண்ட மோட்டார்களை வாடகை அடிப்படையில் அமர்த்தி வெள்ள நிவாரண பணிகள் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது வடகிழக்கு பருவ மழையின் போது வெள்ள தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.01 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **M/s.**ஜீவா எண்டர்பிரைசஸ், அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–315** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண்.28

இந்நகராட்சி பகுதிகளில் தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையினால் தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதை நகராட்சி சொந்தமான மற்றும் வாடகை அடிப்படையிலான மோட்டார்கள் மூலம் மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட இடங்களை மாண்புமிகு.அமைச்சர் பெருமக்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சியர் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டதையடுத்து பருவ மழை தொடர்ந்து அதிகரிக்கும் நிலை உள்ளதால் கூடுதலாக அதிதிறன் கொண்ட மோட்டார்களை பயன்படுத்த அறிவுறுத்தினர். தற்போது நிலையில் நகராட்சி சொந்தமான அனைத்து மோட்டார்களும் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் கூடுதல் மோட்டார்கள் இல்லாத காரணத்தினால் வெள்ள பாதிப்பு அதிகம் உள்ள ஐஸ்வர்யா நகர், நூம்பல் கிருஷ்ணா நகர் மற்றும் பாலாஜி நகர் ஆகிய பகுதிகளில் 40 HP அதிதிறன் கொண்ட மோட்டார்களை வாடகை அடிப்படையில் அமர்த்தி வெள்ள நிவாரண பணிகள் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது வடகிழக்கு பருவ மழையின் போது வெள்ள தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.01 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **M/s.**ஜீவா எண்டர்பிரைசஸ், அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்–316** **நாள்: 13.01.2023**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

*ஓம்/–.* **E.** கிருஷ்ணமூர்த்தி

நகர்மன்றத் தலைவர்,

திருவேற்காடு

**/உண்மை நகல்/**

**ஆணையர்,**

**திருவேற்காடு நகராட்சி.**